**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**
முன்னிலை : திருமதி.G.ஆனந்தி, எம்.ஏ., எம்.எல்.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி.

2021ம் வருடம் டிசம்பர் திங்கள் 01ம் நாள் புதன்கிழமை
**அ.வ.எண்.279/2021 இல் இ.ம.எண்.3/2021 இல் இ.ம.எண்.3/2021**

1. பொள்ளாச்சி தாலூக்கா, மகாலிங்கபுரம், காமராஜர் தெரு, கதவு எண்.11/6, என்கிற விலாசத்தில் வசித்து வரும் திரு.P.R.M.S.ராமநாதன் செட்டியார் மகன் சுமார் 68 வயதுள்ள திரு.R.முத்துகருப்பன்.

2. பொள்ளாச்சி தாலூக்கா, மகாலிங்கபுரம், காமராஜர் தெரு, கதவு எண்.11/6, என்கிற விலாசத்தில் வசித்து வரும் திரு.R.முத்துகருப்பன் மகன் சுமார் 68 வயதுள்ள திரு.R.ராமநாதன்.

... மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

/ எதிர் /

பொள்ளாச்சி தாலூக்கா, பஜார் தெரு, ஈஸ்வரன் செட்டியார் துணி கடை எண்.137, என்கிற விலாசத்தில் வசித்து வரும் திரு.வேணுகோபால் மகன் சுமார் 48 வயதுள்ள திரு.V.ராமநாதன்.

... எதிர்மனுதாரர் / மனுதாரர் / பிரதிவாதி

இம்மனுவானது, இ.ம.எண்.2/2021 மனுவில் 25.10.2021 தேதியில் மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 9 விதி 7 மற்றும் பிரிவு 151ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் நாள் : 29.10.2021

இம்மனுவானது கடந்த 17.11.2021 தேதியன்று இறுதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.G.A.அதிபதி அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் / வாதி தரப்பில்

வழக்கறிஞர் திரு.T.இளங்கோ அவர்கள் முன்னிலையாகியும், மனுதாரர்கள் / பிரதிவாதிகள் மற்றும் எதிர்மனுதாரர் / வாதி தரப்பு வழக்கறிஞர்களின் வாதுரைகளைக் கேட்டும், இதுநாள் வரையில் எனது கவனமான பரிசீலனையில் இருந்து வரும் வழக்காவணங்களை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்...

## இறுதி உத்தரவு

| | |
|---|---|
| 1. | முடிவாக, இம்மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. |
| 2. | செலவுத்தொகை இல்லை. |

## சொத்து விபரம்

– இல்லை –

இவ்வுத்தரவு 2021ம் வருடம் டிசம்பர் மாதம் 01ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

ஒப்பம்/–(G.ஆனந்தி)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

––––––––––––––––––––––––––––––

**இறுதி உத்தரவு**
அ.வ.எண்.279/2021
இல்
இ.ம.எண்.02/2021
இல்
இ.ம.எண்.03/2021
நாள்: 01.12.2021

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
பொள்ளாச்சி.

––––––––––––––––––––––––––––––